# உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியம் - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்பு நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2012 மார்ச் 28 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் கீழ் 01 மேசைப்பந்து மேசையும், 3 இரும்பு அலுமாரிகளும் இருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்கள், நிதியத்தின் கீழேயுள்ள ரூபா 5,529,194 தொகையான நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊக்குவிப்பு நிதியத்தின் கீழ் காணப்பட்ட பணம், அரச ஈட்டு, முதலீட்டு வங்கியில் முதலிடப்பட்டதை அடுத்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வீடமைப்பு நலன்புரி திட்ட நிதியம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந் நிதியத்தில் வருட இறுதியில் ரூபா 28,245,671 தொகையான மீதி காணப்பட்ட போதிலும் கடன் கொடுப்பனவுகளின் பின்னர் அத்திகதியில் உள்ளவாறான அரச ஈட்டு, முதலீட்டு வங்கியின் மீதி ரூபா 8,478,432 ஆக இருந்தது.

(அ) அரச ஈட்டு, முதலீட்டு வங்கியின் 2010 திசெம்பர் மாதத்திற்கான கணக்குக் கூற்றின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி வீடமைப்பு நிதியத்தில் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 10,494,141 ஆக இருந்தும் 2011 சனவரி மாதத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்குக் கூற்றின் பிரகாரம் 2011 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு அம்மீதி ரூபா 12,021,499 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,527,358 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 5,109,075 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் என்பன திணைக்களத்தின் நிலையான சொத்துப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள் முதலியவற்றுடன் இணங்காமை

2006 திசெம்பர் 22 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. பீஈ/423 இன் 03.2 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாடற்ற நிதியத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2006 ஆம் ஆண்டு முதல் ஊக்குவிப்புப் பணக் கொடுப்பனவு செலவினத் தலைப்பு ஏற்பாட்டின் மூலம் செலுத்தப்பட்டதன் காரணமாக உள்நாட்டு இறைவரி ஊக்குவிப்புக் கொடுப்பனவு நிதியம் செயற்பாட்டு நிதியமாக இல்லாதிருந்த போதிலும் அந் நிதியத்தை மூடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. கணக்களிப்பும் நல்ல ஆளுகையும்

உள்நாட்டு இறைவரி வீடமைப்பு நலன்புரி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன் மற்றும் அறவிடல் என்பவற்றை உள்ளடக்கி கணக்கு முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களின்பால் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வீடமைப்பு நலன்புரித் திட்டக் கடன் கட்டுப்பாடு

(ஆ) நிலையான சொத்து முகாமைத்துவம்

(இ) நிதியம் மூடுவதற்கான நடைமுறைகள்